தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 13

2008 ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை யல்லால் துணைவேண்டா ரெஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்."

ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து அஞ்சாமை ஒன்றைத் தவிர வேறு துணை தேவையில்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

151—

விற்பனை வளாகம்

***15166—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய சென்னையில் தனி வளாகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக மாநில அளவில் பொருட்காட்சி மற்றும் விற்பனை அரங்கம் ஒன்று சென்னையில் வள்ளுவர் கோட்டத்தின் அருகில் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 3 இலட்சத்து 63 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் 30 இலட்சம் மகளிர் பயன் அடையும் வகையிலும், 1½ இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு 1½ கோடி ரூபாய் சுழல் நிதி வழங்குவதாகவும், பயிற்சி உதவித் தொகை ரூபாய் 7.50-லிருந்து ரூபாய் 45/- ஆக உயர்த்தியும், அரசு பதவி ஏற்றதிலிருந்து சுமார் 50,000 சுய உதவிக் குழுக்கள் தொடங்கியும், அதிலும் குறிப்பாக, இந்த ஆண்டில் 4 இலட்சம் மகளிர் கொண்ட 25 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்படும் என்ற நல்ல அறிவிப்பைச் செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, சுமார் 50 இலட்சம் பெண் உறுப்பினர்கள் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிலே தமிழக அளவிலே இருந்து வருகிறார்கள். இந்த சுய உதவிக் குழுக்கள் குறிப்பாக, கைத்தறித் துணிகள், வெள்ளி ஆபரணங்கள், தோல் பொருட்கள், கொசு வலை, அழகு சாதனப் பொருட்கள் போன்றவற்றை நல்ல தரமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். இவர்களுக்கு உரிய சந்தைப்படுத்துதல் தெரியாமையால், உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காமல் சுய உதவித் தொழில் பாதிக்கப்பட்ட நிலையிலே இன்றைக்கு இருக்கிறது. போதிய வருவாயின்றி இவர்கள் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, இவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களை இங்கு மாநிலத் தலைநகரான சென்னையிலும் மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலும், ஒன்றியத் தலைநகரங்களிலும் இடைத் தரகர்கள் இல்லாமல் நேரடியாக இவர்கள் அந்தப் பொருட்களை விற்பனை செய்வதற்கு அரசே வணிக வளாகம் கட்டித் தருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. தமிழரசு அவர்கள் இங்கே ஒரு கேள்வியைக் கேட்ட நேரத்தில், 1½ இலட்சம் குழுக்களுக்கு சுழல் நிதியாக 1½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அது தவறு. அதற்குத் திருத்தத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 150 கோடி ரூபாய் சுழல் நிதியை (மேசையைத் தட்டும் ஒலி) வழங்குவதற்கு இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. என்னுடைய மானியக் கோரிக்கைக்கு நான் பதில் அளித்துப் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அதேபோல, இந்த விற்பனைக் கட்டடம், வள்ளுவர் கோட்டத்திற்கு அருகிலே கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

ஆக, இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, 29 மாவட்டத் தலைநகரங்களிலும், ஒவ்வொரு தலைநகரத்திலும் தலா ஏறத்தாழ 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கான வளாகங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் பூமாலை வணிக வளாகம் என்ற பெயரிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவை தவிர, ஒவ்வொரு வளாகத்திலும் தலா 15 கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இது தவிர, மேலும் 16 கூடுதல் வணிக வளாகங்களும் ஏற்படுத்தப்பட்டு, அவையும் தலா 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 14 மாவட்டங்களிலும் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது சென்னையிலே கட்டப்படக்கூடிய இந்த வணிக வளாகத்தைப் பொறுத்தவரையிலே, ஏறக்குறைய 36,300 சதுர மீட்டரிலே அரசு நிலம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் கட்டப்படும் சுய உதவிக் குழு வணிக வளாக மதிப்பீட்டுத் தொகை 10 கோடியே 72 இலட்சம் ரூபாய். அந்த ஒதுக்கீட்டுச் செலவிலே அது கட்டப்படவிருக்கிறது. கடந்த 17-4-2008 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டு, இப்போது ஒப்பந்தப்புள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, தகுதியுள்ள ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய அனுமதியோடு விரைவிலே அந்தக் கட்டடப் பணிகளின் துவக்கப் பணிகள் தொடங்கவிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.*

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அளவிலே தொடங்கப்படுகிற அந்த வணிக வளாகத்திலே, இடைத் தரகர்கள் இல்லாமல், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அவர்கள் விற்பனை செய்வதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கித் தருமா என்பதையும், சேலம், ஏற்காடு போன்ற இடங்களிலே பூமாலை வணிக வளாகம் இருப்பதுபோல, சேலம் மாவட்டத்திலே 12 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக, ஓமலூர் ஒன்றியத்திலே 1,300 சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதிகமான சுய உதவிக் குழுக்கள் உள்ள ஓமலூரிலே, ஓமலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே, காலியாக உள்ள இடத்திலே, உள்ளாட்சித் துறை வாயிலாக ஒரு வணிக வளாகத்தை அமைச்சர் கட்டித் தருவாரா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரகர் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக தரகர்கள் பிரச்சினை இருக்கிற செய்திகள், எங்களுக்கும், அரசுக்கும் அவ்வப்போது வந்துகொண்டிருக்கின்றன. அப்படிச் செய்திகள் வருகிறபோது, அவை குறித்து உடனடியாக விசாரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், அவருடைய பகுதியிலே ஒரு வணிக வளாகம் மகளிர் சுய உதவிக் குழுவிற்காகக் கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு முறையாகப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலிவரதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*